DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.12/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 5 | Caste | : | |
| Name | : | நம்புராஜன் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 27th day of December 2022.
27.12.2022.

முதல் விசாரணை

1. நான் இராமேஸ்வரம் சேராங்கோட்டையில் வசித்து வருகிறேன். சேராங்கோட்டை கிராம தலைவராக பொறுப்புவகித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 3, 4 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் அ.சா.1 அவருடைய அம்மா வீட்டிற்கு வந்துவிட்டு சுனாமி குடியிருப்பில் உள்ள அவரது வீட்டிற்கு சென்றபோது அந்த காட்டு பாதை வழியில் ஆஜர் எதிரி வழிமறித்து சேலையை பிடித்து இழுத்தாக அ.சா.1 என்னிடம் கூறினார். பின்னர் நான் அவரை அழைத்து சென்று தனுஷ்கோடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க உதவியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். பிரியா கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.நான் படித்து பார்க்கவில்லை. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை பொய்யாக கொடுத்த புகாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் சம்பவம் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்கொடுத்த நபர் எனது கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். இந்த எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.